**அ.வ.எண். 195/2023**
**வா.சா.1 : பரமசிவம்**
**தேதி : 18.03.2026**
**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>**
**<u>1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் பிரதிவாதிக்கு மீதி கிரைய பாக்கித்தொகையாக 5,00,000/- ரூபாய் கொடுக்க வேண்டியுள்ளது என்றால் சரிதான். நீங்கள் ஒப்பந்தத்தேதிக்குள்ளாக பிரதிவாதியை அணுகி மீதம் உள்ள தொகையை கொடுத்து கிரையம் செய்துகொள்ள கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் அவ்வாறு பிரதிவாதியை அணுகாமல் நீங்களே தன்னிச்சையாக வழக்கறிஞர் மூலம் பிரதிவாதி ஒப்புக்கொள்ளவில்லை என்று பிரதிவாதிக்கு அறிவிப்பை அனுப்பியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல பிரதிவாதியை நான் அணுகியிருந்தேன் அவர் ஒப்புக்கொள்ளாததால் தான் அறிவிப்பு அனுப்பினேன். நீங்கள் பிரதிவாதியை ஒப்பந்த தேதிக்குள் எந்த காலத்திலும் அணுகவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவ்வறு அணுகியிருந்தால் பிரதிவாதி முறையாக கிரையம் உங்கள் பெயருக்கு செய்து கொடுத்திருப்பார் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் பிரதிவாதியை அணுகாமல் தன்னிச்சையாக பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN Digitally signed by ELAVAZHAGAN Date: 2026.03.18 17:58:56 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.